Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 19 of 2023**

Deposition of P.W. 1 (L.W. 1 ) } Prosecution } Defence }

| | | |
|---|---|---|
| Name of the Witness | : | திருமதி.சகுந்தலா. |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 05.11.2025.

எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கோவள்ளிகோம்பையில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு 2 மகள்கள், ஒரு மகன். என்

மகள்களுக்கு திருமணமாகி விட்டது, மகனுக்கு இன்னும் திருமணமாகவில்லை. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து நிலத்துக்காரர். மூன்று வருடங்களாக எங்கள் குடும்பத்திற்கும், அவருக்கும் வழி தட பிரச்சனை இருந்து வந்தது. முன்று வருடத்திற்கு முன்பாக 29ம் தேதி 5வது மாதம் என் கணவர் காலை 06.00மணிக்கு ஸ்கூட்டியில் வாகனத்தில் பால் எடுத்து கொண்டு கோவள்ளிகோம்பை பஸ்ஸ்டாப்பிற்கு எடுத்து சென்றார். அப்போது குபேந்திரன் எனது கணவரை பென்னாகரம் போகும் வழியில் விநாயகர் கோவில் முன்பு சோத்தாங்கை பக்கமாக கொடுவாளால் கழுத்தில் மாறி மாறி வெட்டியுள்ளார். மாதம்மாவும், சாந்தாவும் அவர்கள் பக்கத்தில் இருந்திருக்கிறார்கள். சத்தம் கேட்டு ஆறுமுகம், விஜய் போயிருக்கிறார்கள். குபேந்திரன் கொடுவாளை எடுத்து கொண்டு வண்டியில் போயுள்ளார். எனக்கு விஜி, சாந்தா, ஆறுமுகம், மாதம்மாள் தகவல் கொடுத்தார். நான் சம்பவ இடத்திற்கு வந்து பார்க்கும் போது என் கணவர் ரத்தம் போயிருந்தது, இறந்து போய்விட்டார். இது சம்பந்தமாக நான் பெரும்பாலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் ***அ.சா.ஆ.1*** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் காவல் நிலையத்திற்கு காலை 08.00மணியளவில் போனேன். புகாரை நான் தான் எழுதினேன். புகாரில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். புகாரில் உள்ள சங்கதிகளுக்கும், அதற்கு அடியில் நான் போட்டிருக்கும் கையெழுத்திற்கும் வேறுபாடுள்ளது என்றால் நான் தான் புகாரை எழுதினேன். புகாரை காவல் நிலையத்திலேயே வைத்து எழுதினேன், எழுதுவதற்கு 1/2 மணி நேரமானது. புகாரை எழுதி முடிப்பதற்கு 8.30மணியானது என்றால் சரிதான். நான் 1, 2 வரை தான் பள்ளிகூடம் போனேன். சுமாராக படிக்க தெரியும். சாட்சி தற்போது காவல் நிலையத்தில் இருந்த ஒரு பெயர் தெரியாத பெண்மணி எழுதியதாக சொல்கிறார். புகாரை எழுதி என்னிடம் படித்து காட்டினார்கள். நான் தற்போது முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் தான் புகாரில் எழுதப்பட்டிருந்தது. புகாரில் 28.05.2022ல் காலையில் வாய் தகராறு ஏற்பட்டதாக சொன்னேன். வழி சம்பந்தமாக தகராறு ஏற்பட்டது.

2) பென்னாகரம் மேச்சேரி ரோடிலிருந்து கோவள்ளிகோம்பை போகும் மண்ரோடில் வலது பக்கம் எங்களின் செங்கல்சூளை, வீடுள்ளது. மண்ரோட்டிற்கு இடது பக்கம் எதிரியின் வீடுள்ளது. மெயின்ரோடிலிருந்து எங்கள் வீட்டிற்கு போகும் 30அடிக்கு வழி பிரச்சனை. நான் சொல்வது

போல் வழி பிரச்சனையே இல்லை என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் ரேசன்கடை, பால்வாடி, கால்நடைமருத்துவமனை தனியாருக்கு சொந்தமான இடத்தில் வாடகைக்கு இயங்கி வருகிறது என்றால் சரியல்ல. அரசாங்கத்திற்கு சொந்தமான இடத்தில் தான் அவைகள் இயங்கி வருகிறது. எதிரி குபேந்திரன் ஊர் பொதுமக்கள் 51 குடும்பாத்தாருடன் சேர்ந்து முன்னிற்று ரேசன்கடை, பால்வாடி, கால்நடைமருத்துவமனை அரசாங்கத்திற்கு சொந்தமான நிலங்களில் இயங்க வேண்டும் என்று மனு கொடுத்தார் என்றால் சரியல்ல. என் அப்பா அரசு நத்தம் புறம்போக்கில் விவசாயம் செய்து குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. என் அப்பாவை விஏஓ, தாசில்தார் எதிரி மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் என் அப்பாவை அந்த நிலத்திலிருந்து வெளியேற்றினார்கள் என்றால் சரியல்ல. அதனால் என் கணவர் கந்தசாமிக்கும், ஊரில் இருப்பவர்களுக்கும் விரோதம் என்றால் சரியல்ல.

3) என்னுடைய புகாரில் 28.05.2022 தேதியில் இரவு 8 மணியளவில் TN 73 D 2777 என்ற கார் எங்கள் செங்கல் சூளை வந்ததாக சொல்லியிருப்பது சரிதான். அந்த கார் வந்ததை போலிசாரிடம் சொன்னேன். அந்த காரில் குபேந்திரன் மட்டும் தான் எட்டி பார்த்தார், வேறு யார் இருந்தார்கள் என்று தெரியாது. குபேந்திரன் லாரி ஓட்டுனர். எதிரி 6 மாதத்திற்கு ஒரு முறை தான் ஊருக்கு வருவார் என்றால் சரியல்ல.

எப்போதாவது வருவார், அவ்வப்போது வந்து போவார். கொரானா ஊரடங்கு போது தான் அவா் ஊரில் இருக்கிறாா் என்றால் அவர் எப்போதும் ஊரில் தான் ஈருக்கிறார். எதிரி கோழிபண்ணை வைத்திருந்தார் என்றால் சரிதான். அந்த கோழிபண்ணையை நானும் அவரது மனைவியும் கூட்டு சேர்ந்து பார்த்து கொள்வோம் என்றால் சரியல்ல. அந்த கோழிப்பண்ணையை எதிரியின் மனைவி வெளியே சென்றால் நான் பார்த்து கொள்வேன் என்றாலும், நான் இல்லாத போது அவா் பார்த்து கொள்வார் என்றால் சரியல்ல. எதிரி குடும்பத்திற்கும் எனக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்றாலும், நாங்கள் நல்ல உறவுமுறையில் இருந்தோம் என்றால் சரியல்ல.

4) என் அப்பாவை நிலத்திலிருந்து வெளியேற்றியதால் தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல, எங்களுக்குள் வழி பிரச்சனை உள்ளது. நான் ஒரே மாடு வைத்திருக்கிறேன். எங்கள் மாடு 4, 5 லிட்டர் பால் கறக்கும். என் கணவா் பாலை எடுத்து கொண்டு போய் சொசைட்டியில் ஊற்றுவார். தினமும் காலை 6.00 மணிக்கு என் கணவர் பாலை எடுத்து செல்வார். என கணவா காலை 5 மணியளவில் இருட்டிலேயே பாலை எடுத்து சென்று விடுவார் என்றாலும், என் கணவரை யார் என்ன செய்தார்கள் என்று தெரியாது என்றால் சரியல்ல. என் கணவரை எல்லோரும் போய் பார்க்கும் போது

என் கணவர் இறந்து கிடந்தார் என்றால் சரியல்ல. 5 பேர் நேரில் பார்த்திருக்கிறார்கள். பாலை காலை 5 மணியளவில் ஊற்றவில்லை என்றாலும், வண்டி கிளம்பி சென்று விடும் என்றால் சரியல்ல. ஊரில் உள்ள அனைவருக்கும் என் கணவர் மீது பகை என்றாலும், என் கணவர் முன்னிற்று புகார் கொடுத்ததால் எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. காரை நான் பார்க்கவில்லை, என் கணவர் தான் பார்த்து விட்டு வந்து என்னிடம் சொன்னார்.

5) நான் காவல் நிலையத்திற்கு சென்று யாரோ எழுதி கொடுத்த புகாரில் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல, நான் சொல்ல சொல்ல தான் புகார் எழுதப்பட்டது. என் கணவரின் வண்டி எண் எனக்கு தெரியாது. புகாரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. போலிசார் மற்ற நபர்கள் தயார் செய்த புகாரில் நான் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் கணவரின் இறப்பிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், யாரோ செய்ததற்கு எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 19 of 2023**

Deposition of P.W. 2 (L.W. 2 ) } Prosecution } Defence }

Name of the Witness : திருமதி.சாந்தா

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 05.11.2025.

எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது கோவள்ளிகோம்பையில் வசித்து வருகிறேன். நான் பால் வியாபாரம் செய்து வருகிறேன். என் கணவருக்கு உடல்நிலை

சரியில்லாததால் நான் போய் பால் வியாபாரம் செய்து வருகிறேன். இறந்து போன கந்தசாமியை தெரியும். அவர் பால் ஊற்ற வரும் போது எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனக்கு தெரிந்தவர், எங்கள் ஊரிலே இருக்கிறார். சுமார் 3 வருடத்திற்கு முன்பு பால் ஊற்றுவதற்காக நானும், மாதம்மாவும் சேர்ந்து போனோம். விநாயகர் கோவில் முன்பு நானும், மாதம்மாவும் நின்று பேசி கொண்டிருந்தோம். அப்போது கந்தசாமி ஸ்கூட்டியில் பால் எடுத்து கொண்டு வந்தார். குபேந்திரனும் அப்போது இரண்டு சக்கர பெரிய வண்டியில் வந்தார். அப்போது கந்தசாமியை குபேந்திரன் சோத்தாங்கை பக்கம் கொடுவாளால் கழுத்து, கழுத்தின் பின்புறம் வெட்டினார். அப்போது நாங்கள் இருவரும் குபேந்திரனை பிடிக்க போகும் போது எங்களை தள்ளி விட்டார். நாங்கள் உடனே கத்தினோம். அப்போது ஆறுமுகமும், விஜயும் ஓடி வந்தார்கள். அவர்களை தள்ளி விட்டு விட்டு குபேந்திரன் அவருடைய வண்டியில் கொடுவாளை எடுத்து கொண்டு சென்று விட்டார். கந்தசாமி அதே இடத்தில் இறந்து விட்டார். நாங்கள் அழுது கொண்டு இருந்தோம், என்னிடம் காட்டப்படும் கொடுவாள் தான் அது. அந்த கொடுவாள் ***சா.பொ.1*** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் வந்து விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் ஒரே மாடு வைத்திருக்கிறேன். 5, 6 லிட்டர் பால் கறக்கும். நான் கோழிப்பண்ணை அருகே இருக்கும் சொசைட்டியில் பால் ஊற்ற போவேன். பென்னாகரம் மேச்சேரி மெயின் ரோடில் கோழிப்பண்ணை உள்ளது. அந்த கோழிப்பண்ணை செல்வத்துடையது. என் வீட்டிலிருந்து பால் சொசைட்டி *1/2* மணி நேரம் நடக்கும் தூரத்தில் உள்ளது. அப்போது வெயில்காலம் என்றால் சரிதான். அப்போது வெயில் காலம் என்பதால் பால் சீக்கிரம் கெட்டுவிடும் என்பதால் பால் வண்டி விடியற்காலை வெளிச்சம் வருவதற்குள்ளே வந்து பால் எடுத்து சென்று விடுவார்கள் என்றால் சரியல்ல. பால் வண்டி லேட்டாக தான் வரும். நான் பால் எடுத்து செல்லும் போது கந்தசாமி இறந்து கிடந்தார் என்றாலும், நான் எதையும் பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

*2)* நான் போலீஸ் விசாரணையில் முந்தையநாள் இரவு கார் வந்ததாக கந்தசாமி சொன்னதாக நான் சொல்லவில்லை. கந்தசாமி எனக்கு உறவினர் இல்லை, ஒரே ஊர்க்காரர். கந்தசாமியின் மனைவி சகுந்தலா, கந்தசாமியின் மாமனாரை எனக்கு தெரியும். கந்தசாமியின் மாமனார் அனுபவித்து வந்த இடத்தை அரசாங்கம் பள்ளிக்கூடம், ரேசன் கடை, கால்நடை மருத்துவமனை கட்டுவதற்காக எடுத்து கொண்டார்கள் என்றால் சரிதான். ஊர்க்காரர்கள் 50, 60 குடும்பங்கள் மனு கொடுத்த பின்பு தான்

அரசாங்கம் அந்த நிலத்தை எடுத்து கொண்டார்கள் என்றால் சரிதான். கந்தசாமி அவருடைய மாமனாரின் நிலத்தை அரசாங்கம் எடுத்து கொண்டதால் ஊரில் இருப்பவர்களிடம் பகை என்றால் சரியல்ல. கந்தசாமிக்கு ஊரில் இருப்பவர்களிடம் பகை என்றாலும், கந்தசாமியை யார் என்ன செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எந்த சாட்சியும் இல்லை என்பதால் போலிசார் என்னை கண்ணுற்ற சாட்சியாக பொய்யாக போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் பாலை கேனில் தான் எடுத்து போவேன். பால் கேனை கீழே வைத்து விட்டு எதிரியை பிடித்தேன். அவர் தள்ளி விட்டு விட்டு போய் விட்டார். குபேந்திரன் என்னை தூக்கி எறிந்து விட்டதால் 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவனைக்கு போனேன். டாக்டர் எனக்கு மருந்து கொடுத்தார், என்னை விசாரித்து எழுதி கொண்டார், என்ன விசாரித்தார் என்று எனக்கு தெரியாது. நான் ஓமலூரில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு போனேன். அங்கு முடியாது என்பதால் பெருந்துறை மருத்துவமனைக்கு போனேன். கந்தசாமி இறந்த இடத்திலே போலிசார் என்னை விசாரித்தார்கள். பிறகு தான் மருத்துவமனைக்கு போனேன். எனக்கு ரத்தத்தை பார்த்தவுடன் என்னால் பேசவே முடியவில்லை. நான் பெருந்துறை மருத்துவமனையில் இருந்த போது போலிசார் என்னை ஒரு முறை விசாரித்தார்கள்.

*3) நான் குவிமுச 161 வாக்குமூலத்தில் எதுவும் சொல்லாமல் போலிசார் சொல்லி கொடுத்தாற் போல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.*

Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 19 of 2023**

| | | |
|---|---|---|
| Deposition of P.W. 3 (L.W. 3 ) | } | Prosecution |
| | } | Defence |
| | } | |

| | | |
|---|---|---|
| Name of the Witness | : | திருமதி.மாதம்மாள் |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 05.11.2025.

எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது கோவள்ளிகோம்பையில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை மற்றும் சாமி வாக்கு சொல்லும் பணி செய்து வருகிறேன்.

இறந்து போன கந்தசாமி தெரிந்தவர். சுமார் 3 வருடத்திற்கு முன்பு காலை 6 மணிக்கு பால் எடுத்து நானும், சாந்தாம்மாவும் கொண்டு போனோம். கந்தசாமி பால் எடுத்து கொண்டு ஸ்கூட்டியில் வந்தார். குபேந்திரன் விநாயகர் கோவில் முன்பாக கத்தியை எடுத்து கந்தசாமியை வழிமறித்து சோத்தாங்கையின் கழுத்து, கழுத்தின் பின்புறம் வெட்டினார். கந்தசாமியை வெட்டும் போது வெட்டிய குபேந்திரனை தடுத்தோம். எங்களை தள்ளி விட்டார். அப்போது ஆறுமுகம், விஜியும் ஓடி வந்தார்கள், அவர்களையும் தள்ளி விட்டு விட்டு குபேந்திரன் பைக்கில் போய் விட்டார். கந்தசாமிக்கு அங்கேயே உயிர் போய்விட்டது. நாங்கள் அங்கேயே கூச்சல் போட்டு இருந்தோம். சாட்சி எதிரியை அடையாளம் காட்டுகிறார். சா.பொ.1னால் தான் குபேந்திரன் கந்தசாமியை வெட்டினார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

பால் எடுத்து கொண்டு நான் போகும் போது காலை 6 மணியிருக்கும். கந்தசாமி கோம்பை ரோடிலிருந்து வந்தார். குபேந்திரன் அவர் பின்னாலே வந்தார். குபேந்திரன் கந்தசாமியின் வண்டிக்கு முன்பாக போய் வண்டியை குறக்கே போட்டார். குபேந்திரன் எந்த கையில் அருவாள் வைத்திருந்தார் என்று தெரியாது. கந்தசாமி வெட்டு காயத்துடன் இறந்து கிடந்ததை நான் பார்த்தேன் என்றாலும்,

கந்தசாமி இறந்து கிடந்ததை தான் நான் பார்த்தேன் என்றால் சரியல்ல. என் மடியில் தான் கந்தசாமி உயிர் போனது. 4, 5 வெட்டுகாயங்கள் பட்டது. எல்லா காயங்களுமே சோத்தாங்கை பக்கம் தான் ஏற்பட்டது. குபேந்திரன் கந்தசாமிக்கு பின்னால் இருந்து தான் வெட்டினார். வண்டியின் குறுக்கே நிறுத்தி வெட்டினால் முன்பக்கம் தான் வெட்டியிருக்க முடியும் என்றும், பின்னால் வெட்டியிருக்க முடியாது என்றால் சரியல்ல.

அப்போது வெயில் காலம் என்றால் எனக்கு நியாபகம் இல்லை. பால் வண்டி 6 மணிக்கு வந்து விடும். நான் பால் ஊற்றி விட்டு எப்போதும் 6 மணிக்கெல்லாம் போய் விடுவேன். ஆனால் அன்றயை தினம் போகவில்லை. ஆனால் அன்று லேட்டாகி விட்டது. ஆட்கள் வரவேண்டும் என்பதால் பால் வண்டி நிறுத்தி வைத்திருந்தார்கள். நான் எப்போதும் போல் அன்றைய தினமும் 6 மணிக்கெல்லாம் பால் ஊற்றி விட்டு போய் விட்டேன் என்றால் சரியல்ல.

2) நான் போலீஸ் விசாரணையில் முந்தையநாள் இரவு கார் வந்ததாக கந்தசாமி சொன்னதாக நான் சொல்லவில்லை. கந்தசாமி எனக்கு உறவினர் இல்லை, ஒரே ஊர்க்காரர். எந்த சாட்சியும் இல்லை என்பதால் போலிசார் என்னை கண்ணுற்ற சாட்சியாக பொய்யாக போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. கந்தசாமியின் உயிர் என் மடியில் போனதாக போலிஸ்

விசாரணையில் சொன்னேன். போலிசார் *11* மணியளவில் வந்தார்கள். நான் ஆறுமுகம், விஜயை அனுப்பி சகுந்தாவிற்கு தகவல் சொன்னேன். அங்கு உடனே எத்தனை போர் கூடியிருந்தார்கள் என்று தெரியாது. சாந்தாவிற்கு கிறு கிறு என்று வந்துவிட்டது, எப்படி கூட்டி போனார்கள் என்று எனக்கு தெரியாது. கந்தசாமி இறந்த போது அங்கு நான் இல்லை என்பதால் தான் அங்கு என்ன நடந்தது என்று தெரியாது என்றால் சரியல்ல. போலிசார் சொல்லி கொடுத்தாற் போல் சம்பவத்தை நேரில் பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 19 of 2023**

} Prosecution
Deposition of P.W. 4 (L.W. 4 ) } Defence
}

Name of the Witness : திரு.ஆறுமுகம்

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 05.11.2025.

எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது கோவள்ளிகோம்பையில் வசித்து வருகிறேன். நான் மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். 29.05.2022ம் தேதி

ஞாயிற்றுகிழமை காலை 6 மணிக்கு வேலைக்கு போவதற்காக நானும், விஜயனும கோவள்ளிகோம்பை பஸ்ஸ்டேண்டில நின்று கொண்டிருந்தோம். அப்போது ஒரு அலறல் சத்தம் கேட்டது. நாங்கள் திரும்பி பார்த்தோம். அங்கு விநாயகர் கோவில் அருகே குபேந்திரன் கந்தசாமியை வலது பக்க கழுத்தில் கொடுவாளால் வெட்டினார். நாங்கள் போய் தடுத்தோம். எங்களை தள்ளி விட்டு குபேந்திரன் கந்தசாமியை வண்டியிலிருந்து கீழே தள்ளி மீண்டும் கந்தசாமியை கொடுவாளால் கழுத்தில் வெட்டினார். நாங்கள் எழுந்திருப்பதற்குள் குபேந்திரன் ஓடி விட்டார். சாந்தம்மாள், மாதம்மாள் சத்தம் கேட்டு தான் நாங்கள் அங்கு போனோம். கந்தசாமி இறந்து விட்டார். நாங்கள் சகுந்தலாவிற்கு தகவல் கொடுத்தோம். சா.பொ.1னால் தான் எதிரி கந்தசாமியை வெட்டினார். சாட்சி ஆஜா் எதிரியை அடையாளம் காட்டுகிறார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனக்கு கந்தசாமி, குபேந்திரன் இருவரும் சொந்தம். கந்தசாமியின் மாமனார் அரசாங்கத்திற்கு சொந்தமான நிலத்தில் இருந்ததால் அரசாங்கம் பால்வாடி, கால்நடை மருத்துவமனை, ரேசன் கடை கட்டுவதற்காக அந்த இடத்தை எடுத்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. அந்த நிலத்திற்கு பட்டா கந்தசாமியின் மாமனார் பெயரிலேயே இருந்தது. அது கிராம

நத்தம் இல்லை என்றாலும், அதற்கு யார் பெயரிலும் பட்டா கொடுக்க மாட்டார்கள் என்றால் சரியல்ல. ஊர்காரர்களும், நானும் சேர்ந்து மனு கொடுத்ததால் தான் அரசாங்கம் கந்தசாமியின் மாமனார் நிலத்தை எடுத்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. கந்தசாமி எனது அக்கா சகுந்தாவின் கணவர். நாங்கள் ஓட்டி கொண்டிருந்த நிலத்தை அரசாங்கம் எடுத்து கொண்டு விட்டது என்றால் சரியல்ல. எதிரி தான் முன்னிற்று ஊர்காரர்கள் சார்பாக மனு கொடுத்ததால் தான் அரசாங்கம் நிலத்தை எடுத்து கொண்டு விட்டது என்று எங்களுக்கு எதிரி மீது பகை என்றால் சரியல்ல. என் அக்கா இரவு செங்கல் சூளை அருகே கார் வந்ததாக கந்தசாமி என் அக்காவிடம் சொன்னதாக என் அக்கா சொன்னார். எனக்கு எதுவும் தெரியாது. அந்த கார் வாடகை காரா, காரின் எந்த விவரமும் எனக்கு தெரியாது.

2) கந்தசாமி இறந்து கிடந்த இடத்திற்கு எதிரே தான் பஸ்ஸ்டாப் என்றால் சரிதான். நான் விநாயகர் கோவில் இருந்த ரோட்டிற்கு எதிரே நின்று கொண்டிருந்தேன். கந்தசாமி பால் ஊற்ற வீட்டிலிருந்து வந்து மெயின் ரோடு டச் ஆகும் இடத்திற்கு வந்தார். குபேந்திரன் கந்தசாமிக்கு பின்னால் வந்தார். இரண்டு பேரும் வரும் போதே நான் பார்த்தேன் என்றால் பார்க்கவில்லை, சத்தம் கேட்டு தான் பார்த்தேன். உண்மையிலேயே நான் அங்கிருந்தால் எனக்கு எல்லா விவரமும்

தெரிந்திருக்கும் என்றாலும், நான் அங்கில்லை என்பதால் தான் எனக்கு எந்த விவரமும் தெரியவில்லை என்றால் சரியல்ல. அது காலி இடம் என்பதால் இரு சக்கர வாகனத்தில் வந்தால் சத்தம் கேட்கும் என்றால் நான் கவனிக்கவில்லை.

என் மாமா கந்தசாமி இறந்து கிடந்ததை தான் நான் பார்த்தேன் என்றாலும், அவர் எப்படி இறந்தார் என்று தெரியாது என்றால் சரியல்ல. ஊரில் இருப்பவர்கள் எல்லாருக்குமே எங்களுக்கும், கந்தசாமிக்கும் ஊரில் உள்ளவர்களிடம் பகை என்றால் சரியல்ல. குபேந்திரன் முன்னிற்று மனு கொடுத்ததால் அவர் மீது பகை என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் கார் எப்போதாவது தான் வரும், முந்தைய நாள் காரில் யார் யார் வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. என்னை தள்ளி விட்டதால் எனக்கு அடி எதுவும் ஏற்படவில்லை. பால் கேனில் இருந்த பால் எல்லாம் கீழே கொட்டியிருந்தது. மூன்று பேரும் பால் கேன் வைத்திருந்தார்கள். ஒரு கேனில் இருந்த பால் மட்டும் கீழே கொட்டியிருந்தது, அது யாருடையது என்று எனக்கு தெரியாது.

கந்தசாமி ஸ்லே செய்து திரும்பும் போது மாதம்மாள், சாந்தா இருந்தார்கள். அப்போது குபேந்திரன் வந்தார், பின்னாடி இருந்து கழுத்தில் வெட்டினார். முதலில் வெட்டினார், பிறகு எங்களை தள்ளி விட்டு விட்டு வெட்டினார். எங்களை தள்ளி விட்டு வண்டியிலிருந்த

கந்தசாமியை கீழே தள்ளி வெட்டினார். அப்போது வெயில் காலம் என்பதால் பால் கெட்டு விடும் என்பதால் பால் வண்டி இருட்டாக இருக்கும் போதே வந்து விடும் என்றால் சரியல்ல. கந்தசாமியை யார் வெட்டினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. யார் என்ன வென்று கண்டு பிடிக்க முடியாததால் எதிரி முன்னிற்று மனு கொடுத்ததால் அவர் மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 19 of 2023**

Deposition of P.W. 5 (L.W. 5 ) } Prosecution } Defence }

Name of the Witness : திரு.விஜய்

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 05.11.2025.

எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கோவள்ளிகோம்பையில் வசித்து வருகிறேன். நான் மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். 29.05.2022ம் தேதி

ஞாயிற்றுகிழமை காலை 6 மணிக்கு வேலைக்கு போவதற்காக நானும், ஆறுமுகமும கோவள்ளிகோம்பை பஸ்ஸ்டேண்டில நின்று கொண்டிருந்தோம். அப்போது நாங்கள பஸ்ஸடாப்பில நின்று கொண்டிருந்த இடத்திற்கு எதிரே சாந்தமாவும், மாதம்மாவும சத்தம் போட்டார்கள். நாங்கள் இருவரும் ஓடி போய் பார்த்தோம். அப்போது குபேந்திரன கத்தியால ஸ்கூட்டியில உட்கார்ந்திருந்த கந்தசாமியை கழுத்தியால் நாங்கள போவதற்கும 2, 3 முறை வெட்டி விட்டார். நாங்கள் ஓடி போய் தடுக்கும் போது எங்களை தள்ளி விட்டு மறுபடியும் 2, 3 முறை வெட்டி விட்டு அவருடைய வண்டியை எடுத்து கொண்டு ஓடி போய் விட்டார். கந்தசாமி அங்கேயே இறந்து போய் விட்டார். பிறகு சகுந்தலாவிற்கு போன செய்து சொன்னோம். சா.பொ.1 கொடுவாளை சாட்சி அடையாளம காட்டுகிறார். சாட்சி எதிரியை அடையாளம் காட்டுகிறார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

கந்தசாமி எனக்கு சொந்தம் தான். அவர் எனக்கு மாமா உறவுமுறை. கந்தசாமி என் அப்பாவின் தாய் மாமா. கந்தசாமியின் மாமனார் நிலத்தை ஊரில் இருப்பவர்கள மனு கொடுத்து நிலத்தை அரசாங்கம எடுத்து கொண்டது என்றால் சரியல்ல. விஏஓ, சர்வேயர் வந்து கந்தசாமியின் மாமனார நிலத்தை மண போட்டு நிரவினார்கள என்றால சரியல்ல.

அதனால் கந்தசாமி மீது ஊரில் இருப்பவர்களுக்கு பகை என்றால் சரியல்ல. கந்தசாமி வீட்டிற்கு எதிரே இருந்த குபேந்திரனுக்கும் பிரச்சனை. என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. குபேந்திரன் கோழிப்பண்ணை வைத்திருந்தார் என்றால் சரியல்ல. குபேந்திரன் என்ன வேலை செய்கிறார் என்று எனக்கு தெரியாது. ஞாயிற்று கிழமை தான் சம்பளம் கொடுப்பார்கள். அதனால் தான் வேலைக்கு கிளம்பி போனேன். ஞாயிற்று கிழமை வேலையே இருக்காது என்றாலும், சனிக்கிழமையே சம்பளம் கொடுத்து விடுவார்கள் என்றால் சரியல்ல. அர்சண்ட் வேலை இருந்தால் போனோம். மதியம் 2 மணிக்கெல்லாம் வந்து விடுவோம். விநாயகர் கோவில் பஸ்ஸ்டாப்பிற்கு எதிரே பஸ்ஸ்டாப் உள்ளது. இரண்டிற்கும் நடுவே 30 அடி தூரம் இருக்கும். அங்கு எல்லாமே காலி இடம் தான். சாந்தம்மா, மாதம்மாள் நின்று கொண்டிருந்த இடத்தில் அரச மரம் இருந்தது. பொதுவாக டூவீலர் போனாலே சத்தம் கேட்கும் என்றால் சரிதான். அன்றைய தினம் நாங்கள் பேசி கொண்டிருந்ததால் சத்தம் எதுவும் கேட்கவில்லை.

அன்றைய தினம் நான் அங்கு இல்லை என்றாலும், கந்தசாமி எனக்கு நெருங்கிய உறவினர் என்னால் கண்ணுற்ற சாட்சியாக போலிசார் என்னை போட்டுள்ளார்கள் என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் 9, 10மணிக்கெல்லாம் வந்து

விட்டார்கள். போலிசார் என்னை சம்பவ இடத்திலும், காவல் நிலையத்திலும் விசாரித்தார்கள். காவல் நிலையத்தில் 3 மணி வரை இருந்தோம். இன்ஸ்பெக்டரும் போலிஸ் ஸ்டேசனில் 3 மணி வரை இருந்தார். குபேந்திரனும், கந்தசாமி இறப்பிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், பொய்யாக இந்த வழக்கில் சேர்த்துள்ளார்கள் என்றாலும், நான் அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 19 of 2023**

| | | |
|---|---|---|
| Deposition of P.W. 6 (L.W. 6 ) | } Prosecution<br>} Defence<br>} | |
| Name of the Witness | : | திருமதி.கோவிந்தி |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 05.11.2025.

எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கோவள்ளிகோம்பையில் வசித்து வருகிறேன். விவசாயம் மற்றும் கூலி வேலை செய்து வருகிறேன். நான்

கோவள்ளிகோம்பை மெயின் ரோடில் குடியிருக்கிறேன். எங்கள் வீட்டிற்கு முன்னாடி அரசமரம், விநாயகர் கோவில் உள்ளது. ரோட்டில் இருக்கும் லைட்டிற்கு என் வீட்டிலிருந்து கனெக்சன் கொடுத்திருக்கிறார்கள். லைட்டை ஆப் செய்யலாம் என்று 3 வருடத்திற்கு முன்னால் ஞாயிற்றுகிழமை 6 மணியளவில் போனேன். அப்போது அங்கு சாந்தமாவும், மாதம்மாவும் இருந்தார்கள். கந்தசாமி பால் எடுத்து கொண்டு வந்தார். அப்போது குபேந்திரன் வெள்ளை சட்டை, வெள்ளை வேட்டி அணிந்து கொண்டு வண்டியில் வந்து நின்றார். அப்போது மாதம்மாவும், சாந்தாவும் கத்தினார்கள். நான் பார்த்த போது ஸ்கூட்டியில் உட்கார்ந்த கந்தசாமியை குபேந்திரன் கத்தியால் சோத்தாங்கை பக்கம் கழுத்தில் வெட்டினார். வெட்டுகிறார்கள் என்று நான் ஓட முற்பட்ட போது ரத்தத்தை பார்த்தவுடன் எனக்கு அதிர்ச்சியாக உட்கார்ந்து விட்டேன். 9, 10 மணிக்கெல்லாம் கூட்டமாக இருந்தது. கந்தசாமி மல்லாந்து கிடந்து அப்படி இறந்து கிடந்தார். கத்தியை எடுத்து கொண்டு குபேந்திரன் ஓடினார். அப்போது நான் பார்த்தேன். சா.பொ.1னால் தான் எதிரி கந்தசாமியை தாக்கினார். சாட்சி எதிரியை அடையாளம் காட்டுகிறார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கந்தசாமி இறந்த இடத்திற்கு எதிரே தான் எங்கள் வீடுள்ளது. கந்தசாமி எனக்கு சொந்தமில்லை. கந்தசாமியை குபேந்திரன் மூன்று முறை வெட்டினார். கந்தசாமிக்கு பக்கத்திலேயே சாந்தாவும், மாதம்மாவும இருந்தார்கள். ஆறுமுகம், விஜயை நான் பார்க்கவில்லை. குபேந்திரன கந்தசாமியை வழி மறிக்கவில்லை. நின்று கொண்டிருந்த கந்தசாமியை பின்னால இருந்து வந்து வெட்டினார். சாந்தமாவும், மாதம்மாவையும குபேந்திரன கீழே தள்ளி விட்டாரா என்றால் நான பார்க்கவில்லை. வெட்டியதை மட்டும பார்த்தேன், அவர்கள கீழே விழுந்ததை நான் பார்க்கவில்லை. கந்தசாமி கலர் பனியன், லுங்கி அணிந்திருந்தார்.

குபேந்திரன எப்போதுமே வெள்ளை வேட்டி, வெள்ளை சட்டை தான போடுவார என்றாலும அதை வைத்து தான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கந்தசாமியை யார் வெட்டினார்கள் என்று தெரியாது என்றாலும், போலிசார கேட்டு கொண்டதால் பொய்யாக சாட்சியம அளிக்கிறேன என்றால சரியல்ல. உண்மையிலேயே நான பார்த்திருந்தால கந்தசாமி அணிந்திருந்த உடைகளின் நிறத்தை பற்றி சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. கந்தசாமி இறப்பிற்கும எதிரிக்கும எந்த சம்பந்தமும இல்லை

என்றாலும், போலிசார் சொல்லி கொடுத்தாற் போல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.